SC.No. 138/18
PW – 4
22.07.2025.
பெயர் : தினேஷ்
த/பெ. : மோகன்

**<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

சம்பவம் நடந்த சமயத்தில் எனது தகப்பனாருக்கு உதவியாக மளிகை கடையில் வேலை பார்த்து வந்தேன். மேற்படி மளிகை கடையை நாங்கள் காலை சுமார் 7.00 மணிக்கு திறப்பது வழக்கம். கடையை அடைப்பதற்கு இரவு சுமார் 10.00 மணி ஆகும். சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் தேதியில் எத்தனை மணிக்கு நான் கடையை விட்டு வெளியே வந்தேன் என்று கேட்டால் அவ்வாறு வந்து செல்வதற்கு எனக்கு ஷிப்ட் முறை எதுவும் இல்லை. எனது தகப்பனார் அழைக்கும்போது எல்லாம் நான் கடைக்கு வருவேன். மற்ற நேரங்களில் பகலில் எனது நண்பர்களுடன் இருப்பேன். எனது வீட்டிற்கும் சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் இடத்திற்கும் இடையே சுமார் 2 கி.மீ தூரம் இருக்கும் என்று சொன்னால் சரிதான். எனது நண்பர் சித்திரைக்கண்ணு, சேசு கடலை மில் நிறுவனத்தில் வேலை செய்து வருகிறார். சம்பவம் நடைபெற்றதாக சொல்லும் இடத்தில் வேறு யாரும் இருந்திருந்தால் என்னை பார்த்திருப்பார்கள் என்று சொன்னால் அங்கு நான் மட்டும் இருந்ததால் வேறு யாரும் என்னை பார்க்கவில்லை. சம்பவம் பற்றி எனக்கு நேரடியாக தெரியும். சித்திரைக்கண்ணு எனது நண்பர் என்பதால் நான் அவருக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. சம்பவம் நடைபெற்றாக சொல்லும் நேரத்தில் சித்திரைக்கண்ணு எனக்கு நண்பர் என்று சொன்னால் சரிதான். நான் சம்பவத்தை நேரில் பார்க்கவில்லை என்று சொன்னாலும் சம்பவம் பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்று சொன்னாலும் சரியல்ல.

Sd/– தினேஷ்

சாட்சி சொன்னபடி என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு அவரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்துக் காட்டப்பட்டு அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டு கையெழுத்து பெறப்பட்டது.
Sd/– திரு.K.S.பால்பாண்டியன்,
தலைமை நீதித்துறை நடுவர்,
புதுக்கோட்டை.